# பரலோக பொக்கிஷங்கள்

**மேலானவைகளையே நாடுங்கள்!** (கொலோசெயர் 3:2)

## 'தேவ பிரசன்னமே' உங்களின் அதிசயமாகக்கடவது!

ஆதி கிறிஸ்தவர்களிடமிருந்த ஓர் விசேஷித்த அடையாளமாய் இருந்ததெல்லாம், அவர்கள் ஜீவியத்தில் ஒளி சுடர்விட்ட "தெய்வீக பிரசன்னமே"யாகும்! அவர்களின் இருதயங்களில் சூரியனே (உலகத்தின் ஒளியே) வந்து உதித்து 'வெளிச்சத்தையும் வெப்பத்தையும்' தந்தபடியால், தெய்வ பிரசன்னத்திற்கு வேறு யாதொரு அடையாளமும் அவசியமில்லாதிருந்தது! சபையாய் கூடிவந்த அந்த கிறிஸ்தவர்களிடம் காணப்பட்ட "உள்ளான ஒளியின் சாட்சியே" போதுமானதாயிருந்தது. 'தெய்வ பிரசன்னத்தை' நாடாதபடியால், அவரது சமூகம் உங்களிடம் இல்லை என்பது கண்கூடாகத் தோன்றவில்லையா?

'ஏதோ அனுபவம் உள்ளது' என்பதற்கும் 'எங்கள் நடுவில் ஒருவர் இருக்கிறார்' என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? ஆதி கிறிஸ்தவ சபைகளில் கூடி வந்தவர்கள் "தங்களோடு வாசம் செய்த தெய்வத்தின் இந்த அதிசயத்தையே" நிறைவாய் பெற்றிருந்தார்கள். நீங்கள் அனுதினமும் 'தெய்வ ஒளியை நாடி' தேவபிரசன்னம் ருசித்திடும் அதிசயத்தை 'நிலைத்திருக்கும் ஜீவியமாக' வாழ்ந்து சுகிப்பீர்களாக!

*-tr*



## ஒளியில் நடந்திட 'மனக்கண்கள்' திறக்கப்பட வேண்டும்!

அன்று இயேசு, பார்வையற்ற மனிதனைப் பார்த்து "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என்றே கேட்டார். அதற்கு அவன் "ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்" என்று கெஞ்சினான் (மாற்கு 10:51). தேவனுக்கு முன்பாக அனுதினமும் நிற்கும் நாம் ஒவ்வொருவரும் இவ்வித 'உள்ளான' பார்வைக்கே ஜெபம் செய்யக்கடவோம்! "ஓ கர்த்தாவே, என் கண்கள் முதலாவது உம்மை காணட்டும்! பின்பு, எனக்குள் இருக்கும் அசுத்தங்களை காணட்டும்! பின்பு உமது இரட்சிப்பை இழந்து தவிக்கும் வெளியுலக மானிடரை காணட்டும்..... எனக்குப் பார்வை தாரும் ஐயா" என்றே ஜெபிக்கக்கடவோம். இவ்வாறாக ஜெபிக்கும்படியே தாவீதும் நமக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார்: "தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும், என்னை சோதித்து என் சிந்தைகளை அறிந்து கொள்ளும், வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ? என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்" (சங்கீதம் 139:23,24).

இவ்வாறு அனுதினமும் தேவனுக்கு முன்பாக தங்களை சோதித்து வாழும் பரிசுத்தவான்கள் மாத்திரமே, பிரசங்க பீடம் ஏறும்போது அனல் கொண்டு நிற்பார்கள்! அங்கு சபை நடுவில், 'அக்கினி பிழம்புகள்' கிரியை செய்யத் தொடங்கும்!! *-Ed*

**2025 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **பிப்ரவரி 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும். புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும்.நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar,
(Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## எனக்கென தேவன் தெரிந்து கொண்ட சிலுவை!

*திராணிக்கு மிஞ்சி சுமை நமக்கில்லை*

இயேசுவானவர், செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கினார் என்ற உண்மை நம் யாவரையும் பரவசப்படுத்துகிறது! (அப்.*1:2*). அவர், தான் கைக்கொள்ளாததை ஒருபோதும் நமக்கு பிரசங்கித்ததில்லை என்பதே நமக்கு பெலனாயிருக்கிறது. "**அவர் தன்னுடைய சிலுவையை சுமந்து கொண்டு போனார்**" என வாசிப்பது, அவர் தன் வாழ்க்கையில் மிக பிரதானமாய் கடைப்பிடித்த ஜீவியமாகும்! (யோவான் *19:17*).

ஒரு சகோதரி, தன் ஜீவியத்தில் அனுபவித்த நிகழ்ச்சியை "**சிலுவை எனக்கு மாறுமோ?**" என்ற தலைப்பில் அவர்கள் எழுதி வைத்த கவிதை மிகவும் பக்தி நிறைந்ததாகும். அந்த கவிதை கூறுகிறபடி, இந்த சகோதரி 'தன்னுடைய சிலுவை' மற்றவர்களுடையதைக் காட்டிலும் மிக கடினமானதாய் கண்டார்!

> "**ஆகவே, தன் சிலுவைக்குப் பதிலாக வேறொரு சிலுவையை பெற்றுக்கொண்டால், அது நலமாயிருக்கும் என எண்ணினார். இந்த மனச்சோர்வில் அவள் தூங்கிக்கொண்டிருந்தபோது, கனவு ஒன்று கண்டாள்:**

*அந்த கனவில் ஒரு ஸ்தலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அந்த நீண்ட அறையில் ஏராளமான சிலுவைகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகள், பல்வேறு அளவில் இருந்தன. அழைத்து வந்த நபர் "உனக்குப் பிடித்த சிலுவையை நீயே எடுத்துக்கொள்" எனக் கூறினார். சுற்றும் முற்றும் பார்த்த நான், ஓர் சிறிதான அழகிய சிலுவையைக் கண்டேன்! அது, தங்கமுலாம் பூசி பளபளத்தது. இதை எடுத்துக் கொள்வது எனக்கு ஆனந்தம் என எண்ணி, ஓடிச்சென்று அதைத் தூக்கினேன். ஆனால் அதை எடுப்பதற்கும் சுமப்பதற்கும் 'அந்த தங்கமுலாம் சிலுவை' மிகுந்த பாரமாய் எனக்கு இருந்தது. விலையேறப்பெற்ற தங்கம் பளபளத்தாலும், தூக்க முடியாத*

*அளவிற்கு என் தோள் கனத்தது! 'இது எனக்கு வேண்டாம்' என அதை வைத்துவிட்டு, தேடித் தேடி, கலை நுணுக்கத்தோடு செய்யப்பட்ட அழகிய சிலுவை ஒன்று கண்டேன். அதைச் சுற்றிலும் செதுக்கப்பட்ட மலர் கொடிகள் இருந்தன. இதுவே எனக்கு உகந்தது என தோளில் சுமந்தேன். ஆனால் அந்த* ***மலர் கொடிக்கு கீழாக இருந்த முட்கள்*** *என் தோள்பட்டையை கிழித்தன! அந்த சிலுவையை வைத்துவிட்டு, பல சிலுவைகளைத் தேடி தேடிப் பார்த்தேன். கடைசியாக, ஒரு சாதாரண சிலுவைக்கு முன் நின்றேன். அதில் தங்கமுலாம் இல்லை! கலை நிறைந்த வேலைப்பாடுகள் இல்லை! சிலுவையை அலங்கரிக்கும் பூக்களும் இல்லை! அதற்கு பதிலாக* ***'அன்பை போதிக்கும்' சில வசனங்கள்*** *இருந்தன. அதை நான் தூக்கியபோது, அது அங்கிருந்த எல்லா சிலுவைகளைக் காட்டிலும், சிறந்ததாகவும் எளிதாகவும் எனக்கு இருந்தது! பரலோகத்திலிருந்து உதித்த மிகுந்த பிரகாசம் அந்த சிலுவையின் மீது பிரகாசித்தது! அப்போதுதான் நான் எடுத்து வந்த சிலுவை, எனக்கு பூமியில் தேவனால் தரப்பட்ட 'பழைய சிலுவைதான்!' என்பதைக் கண்டு பேரானந்தம் கொண்டேன்!*

ஆம், நான் கண்டுபிடித்துவிட்டேன். மற்ற எல்லா சிலுவையைக் காட்டிலும் எனக்கு கர்த்தர் இப்பூமியில் வழங்கிய சிலுவையே எனக்குச் சிறந்தது! இலகுவானது! என்ற ஆச்சரியமான உண்மையை கண்டுபிடித்து, கற்றுக்கொண்டேன்!

எந்த சிலுவையை நான் சுமந்து வரவேண்டும்? என்ற என் தேவையை தேவன் அறிந்து வைத்திருக்கிறார். இப்போது நான் கற்றுக்கொண்ட மற்றொரு உண்மை என்னவென்றால் "மற்றவர்கள் சுமந்து செல்லும் சிலுவை, அவர்களுக்கு எத்தனை பாரமாய் இருந்ததோ?" என்ற கரிசனையான கேள்விதான். நான் சிலரைப் பார்த்து "அவர்களுக்கென்ன ஐசுவரியவான்கள்! என்னைவிட அவர்களுடையது தங்க சித்திரம் கொண்ட சிலுவை!" என ஒப்பிட்டு, சிலுவை பயணத்தில் தயங்கியதுண்டு!

உண்மை என்னவென்றால், என் கனவில் கண்டதைப்போல், அந்த 'தங்க சிலுவை' மிகுந்த சுமை கொண்டதாகும்! இவ்வாறு "என் சிலுவையைவிட, மற்றவர்கள் செல்லும் சிலுவை பாதை ஜீவியம் எளிதாய் தோன்றிய" என ஒப்பிட்டுப் பார்த்த என் சிந்தை மாறி, இப்போது எனக்குத் தரப்பட்ட என் சொந்தமான சிலுவை மாத்திரமே, எனக்கு பொருத்தமாய் இருக்கிறது! என்ற உண்மை, என் உள்ளத்தை பரவசப்படுத்தி விட்டது!

“ நீங்கள் பொறுமையிழந்து, உங்கள் சிலுவையை நழுவவிட்டு விட்டால், மீண்டும் நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ள இயலாது! மறு உலகத்திலும் உங்கள் சிலுவை மீண்டுமாய் தரப்படுவதில்லை!

நாம் வாழும் 'இந்த பூமியின் கடின ஜீவிய பாதையில்' மாத்திரமே, இந்த சிலுவை உங்களுக்கு உண்டு! உங்கள் வாழ்க்கைப் பயணம் முடிந்து, மறுமைக்குள் நீங்கள் பிரவேசிக்கும்போது, உங்களின் நேசத்திற்குரிய ஆண்டவரைக் கண்டு, உங்கள் துயரங்களையெல்லாம் மறந்து, நித்திய காலமும் அவரை அன்புடன் சேவிக்கும் பாக்கியத்தைப் பெற்று ஆனந்திப்பீர்கள்! ஆமென்.

- *Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## “உண்மையுள்ளவனின் ஆராதனை” கர்த்தருக்குப் பிரியம்!

*'சத்திய ஆவி' மாய்மாலம் வெறுக்கிறார்*

கபடு கொண்டவன், இல்லாததை இருப்பதுபோல் காட்டி ஏமாற்றுகிறான். பேதுரு தன் நிருபத்தில், இயேசுவின் குணாதிசயத்தை “**அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவில்லை!**” என அலங்கரித்து எழுதினார் (1பேதுரு 2:22). இக்குணாதிசயமே, இயேசுவிடம் வெளிப் படையாய் காணப்பட்ட குணாதிசயமாயிருந்தது. இவ்வசனம் நமக்கு எடுத்துரைக்கும் சத்தியம் யாதெனில், இயேசுவைத் தவிர மற்ற எல்லா ஜனங்களும் மொத்தத்தில் கபடும், மாய்மாலமும் நிறைந்தவர்களாயிருக்கிறார்கள் என்பதுதான். ஆகிலும், இவ்வளவு இழிவானவர்களாகிய நமக்கு ஓர் மகிமையான பூரண இரட்சிப்பை இக்கிருபையின் நாட்களில் தேவன் அருளியுள்ளார்! நம்முடைய வார்த்தையிலும் நடக்கையிலும் முற்றிலும் உண்மையாயிருக்கும் படியான மாபெரும் செயலை, **தேவன் நம்மில் செய்து முடித்திட ஆயத்தமா யிருக்கிறார்!** என்பதே அந்த மகிமையான நற்செய்தியாய் உள்ளது!

“ இன்றுள்ள அனேக விசுவாசிகள், தங்கள் ஜீவியத்தில் தாங்கள் செய்யும் எந்தக் காரியத்திலும் தவறை மறைக்கிறார்கள்! பாவத்தை மறைக்கிறார்கள்! தங்கள் வீழ்ச்சியை மறைக்கிறார்கள்! தங்கள் உண்மை நிலையை, உள்ளதை உள்ளபடி ஒத்துக்கொள்வதை ஏதோ இழிவான செயலாகவும், அப்படியே மறைக்காமல் பேசினால் தங்களைக் குறித்து மற்றவர்கள் கொண்டிருந்த நல்லெண்ணம் பாதிக்கப்படுமென்றும் எண்ணுகிறார்கள்!

நீங்கள் உண்மையும் நேர்மையும் உள்ளவர்களாயிருக்கும்போது, யாருடைய கண்கள் உங்களை குறைவாய் மதிப்பிடும்? ஜீவியத்தின்

வெளிச்சம் சிறிதுகூட இல்லாதவர்களும், தூய வெண்மையை கருப்பு என்று தவறாக மதிப்பிடும் ஜனங்களின் கண்களே, உங்களைக் குறைவாய் மதிப்பிடும்! அதினாலென்ன? மனுஷர் பார்வையில் மேன்மையாக எண்ணப்படுவதில் ஒரு துளியும் பிரயோஜனமில்லையே!

புத்தியில்லாத **ஜனங்களின் கண்களால்** குறைவாய் மதிப்பிடப்படும் நீங்கள், **தேவனுடைய பார்வையில்** மேன்மையாய் மதிப்பிடப்படுவீர்கள் என்ற உண்மையை அறியீர்களா? தேவனுடைய பார்வையில் மேன்மையாய் எண்ணப்படுவது மாத்திரமே உங்களுக்குப் போதாதா?

பொய்யின் மற்றுமோர் 'டிபார்ட்மெண்டாய்' நாம் காண்பது, உள்ளதை உள்ளதென கூறாத **நேர்மையற்ற நிலையே** ஆகும்! உங்களின் இழிவான நிலையை மறைத்து, இப்போதுள்ள நிலையைக் காட்டிலும் நன்றாயிருப்பதுபோல் நீங்கள் பாவனை செய்வதை, நேர்மையென எவ்வாறு கூறிடமுடியும்?

நேர்மையென்ற பதத்திற்கான குறிப்பை ஒத்தவாக்கியத்தில் பார்க்கும்போது, முதல் குறிப்பாய் குறிப்பிடப்பட்டிருக்கும் வசனம் நம்மை பரவசத்தில் ஆழ்த்துகிறது. "நீதிமான் (நேர்மையுள்ளவர்கள்) மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக" (எண்23:10) என கூறுகிறது.

> "அதாவது, நான் சாகும் கடைசிமட்டும், முற்றிலும் நேர்மையுள்ளவனாய் வாழ்ந்து மரிப்பேன்! என்ற மகிழ்ச்சியே ஆகும்!

நான் பூமிக்குரியவைகளையோ அல்லது ஆவிக்குரியவை களையோ, எதைச் செய்தாலும்..... என் உள்ளத்தின் ஆழத்தில் முற்றிலும் நேர்மை குடிகொண்டிருக்க வேண்டும்!

'கர்த்தருக்கு முன்பான பக்தியில்கூட' இன்று அநேகர் நேர்மையற்றவர்களாய் இருக்கிறார்கள்! சங்கீதக்காரன், "நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்! செம்மையான இருதயமுள்ளவர்களே, **நீங்கள் எல்லாரும்** ஆனந்த முழக்கமிடுங்கள்!" (சங்கீதம் 32:11) எனக்கூறினார். அவர்கூறியபடியே நாம் "எல்லோரும்" ஆனந்த முழக்கமிடுவது மகிழ்ச்சிதான்! ஆனால், அதற்குரிய தகுதியாகிய "செம்மையான இருதயம் வேண்டுமே?" இன்றைய கிறிஸ்தவர்களில் பெரும்பாலோரின் "துதியும் - ஆராதனையும்" என்ற பெயரில் இவர்களின் ஆரவாரத்தில் 'செம்மையான இருதயம்' இல்லையே!

> "நடைமுறையில் தெளிந்த மனம்கொண்டு இவர்களைக் காணும்போது, துதி ஆராதனையில் லகித்திருக்கும் ஒவ்வொருவரிடத்திலும்..... அவர்களின் ஒவ்வொரு செயலிலும் 'நேர்மையற்ற' பொய் வழிந்தோடுவதைத்தான் காணமுடிகிறது!

அங்கு ஊழியம் செய்பவர்கள், ஜனங்களைக் கவர்ச்சித்து, கூட்டத்தில் உணர்ச்சிப் பரவசத்தை தூண்டிவிட்டால், அதுவே தாங்கள் செய்த மகத்தான ஊழியம் என எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால், இவர்கள் செய்து சாதித்த செயல் எப்படி இருக்கிறது தெரியுமா? 'ஓர் சிறந்த நாடகத்தை' அரங்கேற்றி விட்டார்கள், அவ்வளவுதான்! இவர்களின் மாய்மாலத்திற்கு அளவே இல்லை!

**"கவனியுங்கள்! நீதிமான்கள் (நேர்மையுள்ளவர்கள்) மாத்திரமே தேவனைத் துதிப்பதற்கு தகுதி கொண்டவர்கள்!!**

அதை சங்கீதக்காரன் மிகத் தெளிவாகவே நாம் கண்ட சங்கீதம் 32:11-ம் வசனத்தில் கூறியிருக்கிறார். பரிசுத்தாவியானவருக்கு **சத்தியஆவி** என்ற பெயரும் உண்டு. எனவே, சத்தியம் இல்லாத அல்லது நேர்மையற்ற எந்த செயலும் பரிசுத்தமாயிருக்கவே முடியாது! அவ்வாறிருக்கும்போது, ஒரு கூட்டத்தில் உணர்ச்சிகளைத் தூண்டும் சில குறிப்பிட்ட பல்லவிகளைப் பாடி, அங்குள்ள எல்லா ஜனங்களையும் பரவசமடையச் செய்வது, உங்கள் சபையில் ஓர் போலியான அஸ்திபாரத்தைப் போடுவதற்குரிய செயலென்று உங்களுக்குத் தெரியவில்லையா? இவ்வித நேர்மையும் உண்மையும் அற்ற **மாய்மாலமான துதிமுழக்கங்களில்** தேவன் பிரியப்படுவதேயில்லை!

நாம் தேவனை துதிக்கவேண்டும் என்பது நம் ஒவ்வொருவருக்கும் உரிய முக்கிய பொறுப்பாகும். ஆனால் அவ்வித துதியை "உண்மையோடு" செய்ய வேண்டும் என்பதை நாம் மறந்துவிடவே கூடாது. ஆம், நம் கர்த்தரை ஆவியோடும் 'உண்மையோடும்' தொழுதுகொள்ள வேண்டும்!

நேர்மையுள்ளவர்களுக்கு மாத்திரமே துதி உகந்ததாகும்..... மாறாக, கூடிவந்திருக்கும் அனைவருமே அதற்குத் தகுதி உள்ளவர்களாகிட முடியாது! நாம், விழிப்புடன் கர்த்தரை ஆராதித்திடக்கடவோமாக!

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## 'தேவனைத் தொட்டவர்கள்' ஒருவரிலொருவர் அன்பாயிருப்பார்கள்!

*'தேவனை மையமாய்' கொண்டிராத ஐக்கியம் சிதறும்*

கர்த்தரைப் பிரியப்படுத்தி வாழ்வது ஒன்றையே நோக்கமாய் கொண்டவரா நீங்கள்? அப்படியானால் 'ஒருவரையொருவர் அன்பு கூருங்கள்' என்ற இரண்டாவது ராஜரீக அன்பின் கட்டளைக்குப் பாத்திரர்களாய் நீங்கள் நடக்கிறீர்களா? என்பதே, உங்களை அண்டிவரும் மிகப்பெரிய பொறுப்பாய் இருக்கிறது. **அது, கிறிஸ்துவின்**

**அன்பான மனதுருக்கமேயாகும்!** இந்த உலகில் நண்பரோ, உறவினரோ, நல்லவரோ, தீயவரோ, சபையின் சகோதரரோ, சகோதரிகளோ ஆகிய யாதொருவர் மீதும், உங்கள் ஜீவியத்தில் நீங்கள் கொண்ட தொடர்பு 'அன்பின் மனதுருக்கமாகவே' எப்போதும் இருக்க வேண்டும்! "உத்தமமான கிறிஸ்தவ ஐக்கியம்" கிறிஸ்துவின் இந்த குணத்தையே சார்ந்திருக்கிறது! நம்முடைய இருதயம் தொட வேண்டிய ஒற்றுமை, இந்த மெல்லிய கிறிஸ்துவின் அன்பான மனதுருக்கத்தின் தொடுதலை சார்ந்தே இருக்கிறது!

> " **தெய்வ வாஞ்சை கொண்ட புருஷர்களும், ஸ்திரீகளும் 'தேவனை தொட்டபடியால்' அவர்கள் யாவரும் ஒன்றாயிருக்கிறார்கள்!**

இதுவே உத்தம கிறிஸ்தவ சகோதர சகோதரிகளின் மாதிரியாய் விளங்குகிறது. இதைத் தவிர, அவர்கள் யாவரும் வேறுபாடு பல கொண்டவர்கள்.... அதாவது, ஒருவரைப்போல் மற்றொருவர் இருப்பதில்லை என்பதேயாகும்! இந்த அன்பின் உயர்ந்த தராதரமே "இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில்" பிரகாசிக்கும் ஒளியாயிருக்கிறது.

'ஒரு கிட்டார் இசைக்கருவில்' தினுசு தினுசான பருமனில் கம்பிகள் இருக்கின்றன. இருப்பினும், அந்த **அத்தனை தினுசான கம்பிகளும் ஒற்றுமையாய் இயங்கும்போது, மனம் கவரும் கீத ஒலி** அதில் தொனிக்கிறது. ஆகிலும், இந்த இசைக்கருவியிலுள்ள கம்பிகள் அனைத்தும் வெவ்வேறு பருமனில் இருப்பதைக் கண்டீர்களா? அப்படியிருந்தும், வெவ்வேறான இந்த இசை ஒலி கம்பிகள், தங்களைத் தாழ்த்தி இணங்குவதால் "தெய்வ ராகம்" வெளிப்படுகிறது!

இவ்வாறாகவே தெய்வ ஜனமாயிருக்கும் எல்லா விசுவாசிகளும், பரிசுத்தத்திற்கும், கிறிஸ்தவ உத்தமத்திற்கும், அன்பிற்கும் **தங்களை தாழ்த்தி 'ஒற்றுமையாய்' இணங்க வேண்டும்!** இவ்வாறு இணங்கிய ஒற்றுமையில் முடுக்கப்பட்டிருக்கும் கம்பிகள் "தெய்வ கானத்தை" இவர்கள் கூடியிருக்கும் சபையில் தவழச் செய்து விடும்!

> " **இந்த தெய்வீக ஒற்றுமைக்குப் பிறகு, அவர்களுக்குரிய வேறு பல 'வேற்றுமையில்' தாராளமாய் இருப்பதற்கு கர்த்தர் நடத்திய விதமாய் இருந்திட சுதந்திரம் உண்டு! ஆ இதுவே, போலியற்ற 'கிறிஸ்துவின் ஐக்கிய சபை!'**

'குவாக்கர்ஸ்' (Quakers) என்ற இனத்தினர், தங்கள் ஒற்றுமையை தாங்களே பாதுகாக்க முயற்சித்து 'அனைவரும் ஒரே நிறமுடைய சீருடை' (Uniform) அணியச் செய்தனர்! அவர்களுக்கென்றே ஒரேவித

*பாஷை அமைத்தனர்! இவ்வாறு, அவர்களைப் பார்த்தால் 'ஒரேவித ஒற்றுமை' கொண்டவர்களாயிருந்தனர். ஆகிலும், பிரயோஜனமென்ன? அவர்களுடைய இருதயத்திலிருந்த* **வெவ்வேறு விதமான பட்சிக்கும் ஜுவாலைகளை மாற்ற முடியவில்லையே!** *இவ்வாறு வெளிப்புறத்தை மாற்றி ஒன்றாக்கிவிட்டால், அதை ஒற்றுமை என அழைக்கக்கூடுமோ?*

**"நெஞ்சத்தில் குடி கொண்டிருக்கும் "கிறிஸ்துவின் மென்மையான சுபாவத்தில் அல்லவோ" ஒற்றுமையின் ஐக்கியம் இருந்திருக்க வேண்டும். அப்போதுதான் வெளிப்புறத்தில் வேற்றுமை கொண்டிருந்தாலும், இவர்கள் 'நறுமணமிக்க பல்வேறு மலர்களாய்' தேவனுடைய தோட்டத்தில் மணம் வீசி வாழ்வார்கள்.... இவர்களே, கிறிஸ்துவின் மெய்யான ஐக்கிய சபை!**

*ஆகவே 'கிறிஸ்துவின் மென்மையான மனதுருக்கமே' நம் யாவருக்குள்ளும் இருக்க வேண்டும்! அது பல்வேறு தரத்தின் வளர்ச்சியில் இருந்தாலும், அவர்கள் யாவரின் நோக்கமும் இந்த மெல்லிய 'மனதுருக்க' சுபாவமாகவே இருக்கிறது! ஒருவருக்கொருவர் கொண்டுள்ள ஆவியின் தொடுகை இருந்தால்* **"அது, மெல்லிய மனதுருக்கமாய்" இருக்க வேண்டும்.**

*ஒருவரையொருவர் நேசிப்பதை, நடைமுறையான உண்மையில் பேதுரு 'நம் சிந்தையை' வைத்துக்கூறினார். 'நம் இருதயத்தில் அன்பின் தொடுதல்' காணப்படுவது போலவே, சிந்தையாகிய மனதிலும் ஒருவருக்கொருவர் அன்பின் தொடுதலை மாத்திரமே வைத்திருக்க வேண்டும். இங்குதான், தேவனுடைய அன்பின் கட்டில் 'இருவர் ஒருவராகும்' ஐக்கியம் கைகூடுகிறது! தேவன் ஏற்படுத்தித் தந்த வழி, இது ஒன்றுதான்! இந்த ஒற்றுமைக்கே நாம் ஜனங்களை நடத்த வேண்டும். பரிசுத்தாவியானவரும் இந்த இலக்கை முன்வைத்தே நம்மை நடத்த விரும்புகிறார்! அதுபோன்ற ஐக்கியத்தில் கட்டப்பட்ட சபையே, உயிருள்ளதாயும், நிலைத்திருப்பதாயும் இருந்திட முடியும்!*

*அதேசமயம், அங்காங்குள்ள சபைகளையெல்லாம் ஒன்றாக்கி விடலாம் அல்லது* **உலகளாவிய சபைகளின் ஒற்றுமை** *என கூறுபவர்கள் "உத்தம அன்பின் ஐக்கியத்தின் மீது" எந்த அக்கறையும் அற்றவர்கள் என்றே கூற வேண்டும். அதுஏனென்றால், பரந்து விரிந்த சபைகளை ஒற்றுமைக்குள் கொண்டு வந்துவிடலாம் என எண்ணும் இவர்களிடம் வெறுப்பும், சந்தேகமும், வெடிகுண்டு சரங்களும், தாக்குதல் நடத்தும் சேனைகளும் சூழ்ந்திருப்பதை இவர்கள் ஏன் கண்டு கொள்வதில்லை?*

**"இவர்களின் ஐக்கிய பேரொளியாக தேனொழுகும் வார்த்தைகளில்:**

**"சகலவித மனிதர்களும், நம் சகோதரர்கள்தான்! தேவனாகிய பிதாவையும், மனுஷகுமாரனாகிய சகோதரத்துவத்தையும் மையமாய் வைத்து 'எத்தனை வித்தியாசங்கள் நமக்குள் இருந்தாலும்' 'மறந்து விட்டு' சகோதரத்துவத்தில் ஒன்று கூடுவோம்!" என்ற இவர்களின் தூய்மையற்ற சகோதரத்துவத்தை என் நெஞ்சார மறுக்கிறேன்!**

*அது ஏனென்றால், 'இந்த உலகத்தில்' நிச்சயமாய் ஐக்கியமில்லை. அவர்களுக்குள் பிரிவினையும், பகையும், வெறுப்பும், ஏன்.... வெளிப் படையான கலகங்களும் வைத்து நிரப்பிக் கொண்டு "நம்முடைய வித்தியாசங்களை மறந்துவிடுவோம்" என கூறும் இவர்களை நான் உற்றுப் பார்க்க விரும்புகிறேன்! அவர்களின் இடுப்புகளில் வைத்திருக்கும் துப்பாக்கியும், வெடிகுண்டு சரங்களும் இன்னமும் இருக்கிறதே! இவர்கள் ஐக்கியம் எனக் கூறிக்கொள்ளும் பசப்பை, கிறிஸ்தவத்தில் பிரவேசித்த ஒரு புதிய பரிசுத்தவான்கூட ஏமாந்து ஏற்றுக்கொள்ள மாட்டான்!*

நம் இருதயங்களில் வாசம் செய்யும் தெய்வ அன்பாகிய மெல்லிய மனதுருக்கமும், களங்கமற்ற அன்பும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் மாத்திரமே உண்டு! இவைகளை மையமாய் வைத்துதான், சபையிலுள்ள சகோதர சகோதரிகளாகிய நாம் உண்மையான ஐக்கியத்தைக் கட்ட முடியும். 'இது காணப்படாமல்' இவர்கள் கூறிக்கொள்ளும் ஐக்கியம் அஞ்ஞானத்திற்குரியதும்! கேலிக்குரியதும்! என கூறுவதை விட, வேறு வழியில்லை!! தெய்வ அன்பின் ஐக்கியத்தில், கிறிஸ்துவை மையமாய் வைத்து ஓங்கி வளரும் சபைகளே, உத்தம கிறிஸ்தவ ஐக்கிய சபைகள்!

*- A.W.டோசர்*

---

## 'அகந்தை சிதைக்கப்படும் இடமே' சபை கட்டப்படும் ஸ்தலம்!

*'மனுஷீக ஞானம்' தெய்வ ஞானத்திற்கு எதிரி*

தேவனுடைய அணுகுமுறை மகா இரகசியமாகும். அவருடைய ரகசிய நடவடிக்கைகளை கற்றுக்கொள்ள 'பாலகர்களால் மாத்திரமே' முடியும். இந்த உலகில் பட்டம் பெற்று, இந்த உலக மேன்மையைக் கொண்டு தலைதூக்குபவர்கள், அதைக் கொண்டு, தங்களை 'கர்த்தருடைய ஆலோசகர்களாக' எண்ணிக் கொண்டவர்கள் ஆகிய, **'ஞானவான்களுக்கு' அவர் தம் இரகசியத்தை ஒளித்துவைக்கிறார்.** ஏனெனில், இதுபோன்ற தங்கள் கல்வி சாமர்த்தியத்தால், அளக்க முடியாத தேவத்துவத்தின் ஆழங்களை, தங்களால் அளந்திட

*முடியுமென எண்ணுகின்ற வேத பண்டிதர்களின் எண்ணங்களை தேவன் அருவருக்கிறார். ஆம், 'திவ்விய ஞானம்' மறைவிடத்தில் ஒளிந்திருக்கிறது! இவர்கள் இந்த உலக ஞானத்தில், வேத பண்டிதத்தில் எத்தனை பிரகாசமாயிருக்கிறார்களோ..... அந்த அளவிற்கு, தெய்வீக ஞானம் அவர்களை விட்டு தூரமாயிருக்கிறது!*

> **“'மனுஷன்' என்றாலே, தேவத்துவத்திற்கு முற்றிலும் மாறான திசையேயாகும். நாம் நன்மையை தீமையென்று கூறிவிடுவோம்! தீமையை நன்மையென்றும் கூறிவிடுவோம்! இவைகளையே 'நீதியாகவும்' நாமாக எண்ணிக்கொள்கிறோம்! தேவனுடைய பார்வையிலோ, இதுபோன்ற மனுஷநீதி அருவருப்பாகவே இருக்கிறது.**

*இவ்வுலகில், தங்கள் சொந்த கண்களுக்கும், மற்றவர்களுடைய கண்களுக்கும், தங்களை நீதிமான்களாக வைத்துக் கொள்ள யாருக்குத்தான் மகிழ்ச்சியிருக்காது? இதுபோன்ற தங்கள் நீதி தேவனைப் பிரியப்படுத்தக்கூடுமோ? என, இவர்கள் சிந்திப்பதுகூட இல்லை! 'இதுபோன்ற நீதி' புறாவின் வடிவத்தில் 'வல்லூரின்' இருதயத்திற்குள் மறைந்து கொள்ளும் செயலேயாகும்! மிகவும் நேசமுள்ள தேவன், இந்த கொடிய வல்லூருகளை மிகவும் வெறுக்கிறார்!*

*இந்த சுயநீதி கொண்டவர்களை இயேசு பார்த்து "வியாதியஸ் தர்களுக்கே வைத்தியன் தேவை! உங்களைப் போன்ற மாய்மாலக் காரர்களை நான் நாடித் தேடவில்லை" எனக் கூறினார். அன்பே ஊற்றாயிருப்பவர் நம் தேவன்! ஆகிலும், நம் ஆண்டவர் தன்னையே விலையாகக் கொடுத்து வாங்கிய இரட்சிப்பை, இந்த சுய - நீதிமான்களுக்கு அல்ல, ஏழைப் பாவிகளுக்கே தந்துவிட மனதுருக்கம் கொண்டிருக்கிறார்!*

*ஏனெனில், தன்னை நிர்பந்தமான பாவியென உணர்ந்து, தன் பாவ நிலையின் கொடூரத்தை உணர்ந்தவன் மாத்திரமே, தன் பெரும் துயரத்தில், தன் இரட்சகரின் கரத்தில் சாய்ந்து விடுகின்றான். இவர்களுக்கே தன் இரட்சிப்பைத் தந்துவிட தேவன் வைராக்கியம் கொண்டிருக்கிறார்!*

*அந்த, சுய-நீதி கொண்டவர்களுக்கு அல்ல! அந்த சுயநீதி கொண்டவர்கள், தாங்கள் செய்த பல நற்கிரியைகளை கற்பனையில் வைத்து, அதன் மூலம் தங்கள் 'சொந்த கைகளால்' இரட்சிப்பை பற்றிக்கொள்ளலாம் என எண்ணுகிறார்கள். தாங்கள் செய்த அனைத்து நற்செயலுக்கும் 'பரலோகமே' தங்களுக்கு கிடைக்கபோகும் பிரதிபலன்! எனவும், பெருமிதம் கொண்டிருக்கிறார்கள்:*

"

**நற்கிரியைகளால் நிறைந்த இவர்களுக்கு இரட்சகர் ஏன் தேவை? இதற்கு நேர்மாறாக, ஏழை பாவிகளோ 'தங்கள் விசுவாசத்தையும் தெய்வ அன்பையும் சிறகுகளாகக் கொண்டு'பறந்து சென்று, தங்கள் இரட்சகரின் மார்பிலே சாய்ந்துகொள்கிறார்கள்!**

*அந்த இரட்சகபெருமான், தனது ஈவாய்: தனது அனைத்து வாக்குதத்தங்களையும் அவர்கள்மீது பொழிந்து விடுகிறார்!*

*இதுபோன்ற ஏழை பாவிகளில் ஒருத்திதான் மகதலேனா மரியாள். அவளின் அதிகமான பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்கு 'தெய்வ அன்பே' காரணமாகும். அவளின் விசுவாசமும் அன்புமே தேவ நீதியாக கருதப்பட்டது!*

*ஆபிரகாம் வழிவந்த முற்பிதாக்கள் நீதிமான்களாய் வாழ்ந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகிலும், அவர்களுடைய* **விசுவாசமும், தேவன் மீது கொண்டிருந்த சொல்லி முடியா அன்புமே, போற்றுதலுக்குரியதாக மாறியது!**

*ஆகவே, சுயநீதியில் நம்பிக்கை கொண்டவர்கள் விசுவாசத்திற்கும் தெய்வ அன்பிற்கும் முரண்பாடு கொண்டவர்கள்! 'மனுஷன்' சாதாரணமாக, தன்னையே முற்றிலும் சாய்ந்து கொள்ளும் பண்புடையவன். இதனிமித்தமே, அவர்களைப் புறக்கணித்து, 'தங்களைத் தகுதியற்ற பாவியென உணர்ந்தவர்களையே' தன் கரங்களில் தேவன் எடுக்கிறார்! அவர்களிடமே தன் கிருபையின் ஐசுவரியங்களை ஊற்றுகிறார்! தேவ ஞானமும் இவர்களிடமே செயல்படுகிறது!*

"

**தான் என்ற அகந்தையில் கட்டப்பட்ட அனைத்தையும் தேவ ஞானம் உடைத்து சிதைத்து விடுகிறது! பின்பு அந்த சிதைக்கப்பட்ட இடத்திலிருந்தே, தேவ ஞானம் தனது மாளிகையை கட்டி எழுப்புகிறது!**

*தேவனுடைய ஊழியத்தின் பணியிலும், இவ்வித நிர்ப்பந்தமும் பெலவீனமுமான இவர்களையே தனது நல்ல ஆயுதங்களாய் தேவன் பயன்படுத்துகிறார்! "இந்த கல்லின்மேல், என் சபையைக் கட்டுவேன்!" என கூறிய பங்கு, கன்மலையாகிய கிறிஸ்துவின்மீது கொண்ட உறவை வைத்தே, தன் சபையாகிய மாளிகையை தேவன் கட்டுகிறார்!*

*மேற்கண்ட* **"தேவ உறவுக்குரிய" அஸ்திபார சத்தியங்களை** *உங்களால் விளங்கிக்கொள்ள முடிகின்றதா? வான் உயர்ந்து தேவனோடு சஞ்சரித்து வாழ, உங்களுக்கு சிறகுகள் தேவை..... விசுவாசத்திற்கும், தெய்வ அன்பிற்குமே இந்த சிறகுகள் உண்டு என்பதை நான் திட்டமாய் அறிந்திருக்கிறேன்!*

*- மேடம் குயான்*

## ஐசுவரிய ஈர்ப்பு, தேவனை புறக்கணித்து விடும்!

*உலகப்பொருட்களில் 'ஜீவன்' இல்லை*

*ஏன் கவலைப்படக்கூடாது? என்பதற்குரிய விடையை இயேசு கூறும்போது "ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?" என பதில் கூறினார். ஆகவேதான், கிரேக்க மூல பாஷை மொழிபெயர்ப்பின்படி* **"கவலைப்படுவதை நிறுத்துங்கள்!"** *என்றே மத்தேயு 6:25-ம் வசனம் குறிப்பிடுகிறது. தொடர்ந்து 6 - வசனங்களில் பல விளக்கங்களை கோடிட்டு காட்டிய இயேசு, 31-ம் வசனத்தில் "இனிமுதல்* **கவலைப்பட ஆரம்பிக்க வேண்டாம்!"** *என்றே முற்றுப்புள்ளி வைத்தார். ஆகவே 25-ம் வசனத்தையும், 31-ம் வசனத்தையும் அடைப்புக் குறியாய் பயன்படுத்தி, ஓர் தெளிவான செய்தியை நமக்குத் தந்துள்ளார். அதுஎன்னவென்றால்:* 1) *நீங்கள் கவலை கொண்டவர்களாய் இருந்தால், அதை விட்டு வெளியே வாருங்கள்* 2) *நீங்கள் கவலைப்பட ஆரம்பிக்கவில்லையென்றால் 'அந்த கேடான ஆரம்பத்தை நிறுத்தி விடுங்கள்' என்ற மகிழ்ச்சியான செய்தியேயாகும்.*

*'ஜீவன்' என இயேசு குறிப்பிட்ட வார்த்தைக்கு கிரேக்க மொழிபெயர்ப்பில் 3-விடைகளை உள்ளடக்கியே வைத்துள்ளது:* i) *பூமிக்குரிய நிறைவு* ii) *சரீரத்திற்குரிய நிறைவு* iii) *வெளிப்புற வாழ்க்கையின் நிறைவு என்பதேயாகும். ஆம், நிலையில்லாத இந்த உலகத்திற்குரிய உணவு, உடை, உறைவிடம் ஆகியவைகளை உட்படுத்தியே 'இவைகளில் ஜீவன் இல்லை!' என அறிவித்தார். அவர் ஏற்கனவே மத்தேயு 6:21-ம் வசனத்தில் "உங்கள் பொக்கிஷங்கள் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" என்று இயேசு தெளிவாய் கூறியுள்ளார்:*

> "பூமிக்குரிய ஐசுவரியத்தின் மேல் மாத்திரமே மனது வைத்தவர்களுக்கு 'பூமிக்குரிய வேதனைகள்' பெருகிக் கொண்டேயிருக்கும். இதனிமித்தமாய், நம்முடைய ஆவிக்குரிய உயர்ந்த பார்வை குருடாகி, தேவனுக்கு ஊழியம் செய்வதிலிருந்து நம்மை பின்தங்கச் செய்துவிடும்! இந்த அபாயத்தினிமித்தமே "உங்கள் தேவைகளை நானே தருவேன்" என தேவன் வாக்குரைத்துள்ளார்.

*ஆகவே, தேவனுடைய பிள்ளைகளாய் வாழும் நமக்கு, உயர்ந்த இலட்சியங்களே உண்டு:*

*1) பரலோகத்தில் நமது பொக்கிஷம் - நமது* **ஒரே இலட்சியம்!**

*2) தேவனுடைய திட்டம் என் வாழ்வில் நிறைவேற வேண்டும் - நமது* ***ஒரே தரிசனம்!***

*3) பணமல்ல, தேவனே என் எஜமான் -* ***ஒரே ஆராதனை!*** *(மத்தேயு6:19-24).*

*ஆகவேதான், இந்த உலகத்தின் அடிப்படை தேவைகளோடு நம்மையும் இணைத்து 'நாம்' என்னத்தை புசிப்போம் அல்லது 'நாம்' என்னத்தை குடிப்போம்! என, உலக மாந்தர்களோடு, நாம் சாய்ந்து விடக்கூடாது (வசனம் 25).*

உணவையும் உடையையும் குறித்து இயேசு எச்சரித்த வாக்கியங்கள் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு பொருந்தாததாய் தோன்றலாம். நாம் குடிப்பதற்கு ஏராளமான தண்ணீர்கள் இருந்தால், தண்ணீரைக் குறித்து யோசிக்கக்கூட மாட்டோம். அக்காலங்களில் "தேசத்திற்கு பஞ்சம் உண்டாகும்" என தீர்க்கதரிசனம் சொல்லப்படாதிருந்தால், என்னத்தை உண்போம்? என்னத்தை குடிப்போம்? என்ற சிந்தை ஏற்பட வாய்ப்பில்லை! ஆனால், இயேசுவின் வார்த்தைகளை கேட்க சூழ்ந்திருந்த மக்கள், பாலஸ்தீன மக்களாயிருந்தபடியால், இயேசுவின் வார்த்தைகளை கவனித்துக் கேட்டார்கள்! அங்கு சில வருடங்களில் திடீரென்று சுற்றியுள்ள மலைகள் மேல் பனி பெய்வது நின்றுவிடும்! ஆகவே நீரோடைகளும் வற்றிவிடும்! பஞ்சத்தில், ஏராளமான வெட்டுக்கிளிகள் பயிர்களை அழித்துவிடும்! இதுபோன்ற பஞ்ச காலத்தில் வருமானம் ஏதும் இருப்பதில்லை. வருமானம் இல்லாத காலங்களில் தேவையான 'குளிர்கால உடைகளைக்கூட' வாங்க முடியாமல் போய்விடும்!

> **"ஆகவேதான், இயேசுவுடைய நாட்களில் வாழ்ந்த பாலஸ்தீன மக்களை கரிசனையோடு முன்வைத்தே "அடிப்படை தேவைகளுக்குக்கூட நீங்கள் கவலைப்படக்கூடாது" என நடைமுறைப்படுத்தி இயேசு கூறினார்.**

சொந்த தேவைகளுக்காக கவலைப்பட வேண்டியது அவசியம்தான் என எண்ணியிருந்த அந்த மக்களுக்கு, தான் கூறிய வார்த்தைகளை நிரூபிக்கும் விதமாய் "**ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும்! உடையைப் பார்க்கிலும் சரீரமும்!** விசேஷித்தவைகள் அல்லவா?" என சவாலாய் முன் வைத்தார்! (மத்.6:25).

*இயேசு கூறியதை மனதில் வைத்து, இக்காலத்து மக்களை சற்று கண்ணோக்கிப் பாருங்கள்! அவர்கள் முற்றிலுமாய் சரீரத்திற்காகவே வாழ்கிறார்கள்! சரீரத்தை அழகுப்படுத்துகிறார்கள்! அதை*

*உடுத்துகிறார்கள்! அந்த சரீரத்தை ஓர் நல்ல மோட்டார் வாகனத்தில் அமரச் செய்கிறார்கள்! அதை ஓட்டிக்கொண்டு ஒரு வசதியான வீட்டிற்கு முன் நிறுத்தச் செய்கிறார்கள்! காரில் கொண்டு வந்த உணவுபொருட்களை சாப்பாட்டு மேஜையில் நிறைத்து வைக்கிறார்கள்! புசித்து முடித்து, தங்கள் சரீரத்தை விலையுயர்ந்த ஆபரணங்களினால் அலங்கரித்துக் கொள்கிறார்கள்! பின்பு கடற்கரை செல்கிறார்கள்! ஆடம்பர கப்பலில் பயணிப்பது முதலாய்..... எத்தனையோ வெளிப்படையான கவலைகளை இந்த ஜனங்கள் சரீரத்திற்காக சுமந்து திரிகிறார்கள்!*

**நிலையில்லாத இவைகளை விட தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வரும் ஜீவனே பெரிது எனவும்!** *அந்த ஜீவன் நமக்குள் பரிபூரணப்படவே இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்தார் எனவும்! நம் யாவருக்கும் வேதப்புத்தகம் தெளிவாய் போதித்திருக்கிறது!*

*- ஜான் மேக்ஆர்தர்*

---

## வருகைக்கு ஆயத்தமுள்ளவர்கள், பரிசுத்த ஜீவியம் வாழ்வார்கள்!

*அவரை சந்திக்க, நிலைத்திருக்கும் ஜீவியம் வேண்டும்*

கர்த்தராகிய இராஜாவின் இரண்டாம் வருகை மிக சமீபம்! "வருகிறவர் இன்னும் கொஞ்சக்காலத்திலே வருவார்". அவர் வருகை நிச்சயமென்று எதிர்பார்ப்போமானால் நமது ஜீவியமும், ஊழியமும், சகல காரியங்களும் மாறுதலடையும்! அவர் வருகை, தங்கள் காலத்திலிருக்குமென்று எதிர்பார்த்த ஆதிக்கிறிஸ்தவர்களும், அதுபோல் **வாஞ்சையோடு எதிர்பார்த்த** பிற்கால கிறிஸ்தவர்களும் உலகத்தைவிட்டு முற்றிலும் பிரிந்து, கர்த்தருக்கென்றே பிழைத்து, சகல துன்பங்களையும் பொறுமையோடு சகித்துக்கொண்டது எத்தனை பரவசமாயிருக்கிறது! **இன்ன நேரம் உங்கள் எஜமான் வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்** என்றே நம் யாவருக்கும் இயேசு கட்டளையிட்டுள்ளார்.

> **"நாம் கர்த்தரின் வருகையை எதிர்பார்க்கும்போது 'நமது ஜீவியமும்' அவ்விதமாகவே மாறும்! மாத்திரமல்ல, அவரது இரண்டாம் வருகை சம்பவிக்கும்போது, கேடான முழு உலகமும் மாறி, அவரது ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும்!**

'தேவ ராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை' பிரசங்கித்தால் போதும், இந்த உலகம் நல்லதாய் மாறிவிட முடியும்! என பிரசங்கித்திடும் கூட்டத்தார் நம்மிடையே உண்டு! அது ஒருபோதும் ஆகாது. எவ்வளவாகப்

*பிரயாசப்பட்டாலும், எத்தனைபேர் கிறிஸ்தவர்களானாலும், உலகம் எவ்வளவு நாகரீகமும் அறிவும் அடைந்தாலும், அவைகளாலே மனுஷருடைய சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போகுமோ? கண்ணீர் யாவும் துடைக்கப்படுமோ? பசி தாகம் அற்றுப்போகுமோ? வேதனைகளும் மரணமும் நீங்கிவிடுமோ? பஞ்சம், கொள்ளைநோய், இடிமுழக்கம், பூமியதிர்ச்சி, யுத்தம் முதலான தீங்குகள் பூமியைவிட்டு விலகுமோ? ஐயோ, இதெல்லாம் என்ன பேச்சு?*

> "
> ***ஆசீர்வாத கர்த்தர் மீண்டும் வருமட்டும் பூமிக்கு ஆசீர்வாதம் ஏது? இராஜாதி இராஜா வருமளவும் பிசாசின் சத்துருசேனைகள் அழிவதேது? ஜீவாதிபதி வருமளவும் பாதாளமும் மரணமும் மேற்கொள்ளப்படுவதேது? சிருஷ்டிகர் வராமல், புதிய வானமும் புதிய பூமியும் உண்டாவதேது?***

*நியாயாதிபதி வெளிப்படாமல் இராஜ்யத்தின் புத்திரரும் பொல்லாங்கனுடைய புத்திரரும் பிரிக்கப்படுவதேது? பாவத்தைச் சுமந்து தீர்த்தவர் தரிசனமாகாமல், பாவம் இல்லாமற்போவதேது? இவர்கள் சொல்லுகிறபடி உலகம் 'படிப்படியாகச்' சீர்ப்படப் போகிறதில்லை. மேற்கூறிய தீங்குகளை அகற்ற உலக ஆன்மீக போதனை ஞானமெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஆகாது! மனுஷன் தன் உள்ளத்தைச் சரிப்படுத்தக்கூடாமல் தத்தளிக்கும்போது, உலகத்தை தன் போதனை கொண்டு நல்லதாய் அல்லது தேவ இராஜ்ஜியமாய் எப்படி மாற்றுவான்? "மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்" கிறிஸ்துவின் வருகையில் அப்படியே ஆகும். ஆமென்!*

**கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிச்சயம்!** *"இயேசு திரும்ப வருவார்" என்ற செய்தி இல்லாமல், கிறிஸ்துமார்க்கம் புதிய ஏற்பாட்டில் இல்லை. புதிய ஏற்பாட்டிலுள்ள 260 அதிகாரங்களில் 318 தரம் அவர் வருகையைப் பற்றி வாசிக்கிறோம். கிறிஸ்துவே தமது வருகையைப்பற்றித் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறார்! வருகையைப்பற்றிய வாக்கியங்களை புதிய ஏற்பாட்டிலிருந்து நீக்கிவிட்டால் அது வெகு விநோதமான புத்தகமாய் மாறிவிடும்!*

> "
> **வருகையின் நம்பிக்கையை நமது சபையைவிட்டு எடுத்துவிட்டால், சபையின் ஒழுக்க நெறி கோட்பாடுகள் வெகு பரிதாபமாயிருக்கும்!**

*முதலாவது, கர்த்தருடைய ஜெபத்திலே "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக" என்பதை நீக்க வேண்டிய நிலையாகிவிடும்! விசுவாசப்*

*பிரமாணத்தில் அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டதோடு நிறுத்த வேண்டும்!? இராபோஜன ஆராதனையில் "கர்த்தர் வருமளவும்" என்பதை வாசிக்கக்கூடாது. அடக்க ஆராதனையில் "பலவீனமாய் விதைக்கப்படும் பலமுள்ளதாய் எழுந்திருக்கும், கனவீனமாய் விதைக்கப்படும் மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும், ஜென்ம சரீரம் விதைக்கப்படும் ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்" என்று வாசிப்பதை நிறுத்த வேண்டும்! ஆகவே "கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் முக்கியத்துவம் எவ்வளவு என்பதைப் பாருங்கள்!*

**" ஆம், வேதத்தில் ஒரு சத்தியத்தை தன் இஷ்டத்திற்கு மறுத்துவிட்டு, இலேசாய் தப்பிக்கொள்ளலாம் என்று நினைப்பது பிசகு!**

*அவர் வருகை இதோ இங்கே என்றும்! அதோ அங்கே என்றும்! யாராகிலும் சொன்னால் அவர்களைப் பின்பற்றக்கூடாது. யாராகிலும் தேதி குறித்தால் அதை நம்பவுங்கூடாது! வருகையை எதிர்பார்த்து மற்ற தேசங்களில் ஜனங்கள் மோசம்போனதுபோலவும், நமது தேசத்திலும் நடந்திருக்கின்றன.*

*அவருடைய வருகைக்காக நாம் இடம்விட்டு இடம் போக வேண்டியதில்லை. வேலைகள் யாவையும் நிறுத்தி வானத்தை அண்ணாந்து பார்க்க வேண்டியதில்லை! கர்த்தர் நம்மை அழைத்து ஏற்படுத்தின ஸ்தானத்தில்தான் இருக்க வேண்டும்!*

*சகல பாவங்களையும் விட்டுத் திரும்பி, இருதயத்தையும் ஜீவியத்தையும் கிறிஸ்து இராஜாவுக்காக ஒப்புக்கொடுத்து, அவர் சித்தம்போல் சகல விஷயத்திலும் அவருக்குப் பிரியமாய் நடக்க வேண்டும்! வேத வாசிப்பிலும், ஜெபத்திலும், பக்திக்குரிய புத்தகங்களை படிப்பதிலும், நிலைத்திருக்க வேண்டும்! அதுவே பிரதானம்.*

*நாம் வீட்டிலிருக்கும்போதோ, வழிநடக்கும்போதோ, வேலை செய்து கொண்டிருக்கும்போதோ, வீட்டுக்குத் திரும்பும்போதோ, சாப்பிடும்போதோ, பிள்ளைகளோடு பேசிக்கொண்டிருக்கும்போதோ, இரயிலிலோ, கப்பலிலோ, இரவிலோ, பகலிலோ, அவர் எப்போது வரவேண்டுமானாலும் வரட்டும்! எந்நிலையிலும், நம் இருதயத்தின் அந்தரங்கத்தை உத்தமமாய் அவருக்குமுன் காத்து நடப்பதே நமது பொறுப்பு!* **நாம் அவரைச் சந்திக்க ஆயத்தமாயிருப்போம்:** *"இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்:* **மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்** *என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்" (வெளி.22:20).*

*- பரமானந்தம் ஐயர்*

## ‘அளவெடுத்து’ பராமரிக்கும் நல்ல டெய்லர், என் இயேசு!

*எத்துன்பத்திலும் ‘மகிமை ஒன்றே’ அவரது நோக்கம்*

*திடீரென்று தன் இளம் மனைவியை ஒரு விபத்தில் இழந்து, தன் பிஞ்சு குழந்தைகளின் பாரம் சுமந்த ஓர் உத்தம விசுவாச சகோதரன் கூறினார்: “நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்! இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்” என்ற சங்கீதம் 119:67-ம் வசனத்தை நான் பலமுறை படித்திருக்கிறேன். ஆனால், என் வாழ்வில் நிகழ்ந்த உபத்திரவத்திற்குப் பின்புதான் “நிஜமாய்” அந்த வசனத்தை அனுபவித்தேன்! இந்த பாடுகள் என்னை மெய்யாய் தேவனிடத்தில் கிட்டி சேர்த்திருக்கிறது! என் ஆவிக்குரிய ஜீவியம் அவ்வளவு சீராய் மாற்றியமைக்கப்பட்டது!*


*இதைக்கேட்ட அவரது கிறிஸ்தவ நண்பர், பரிகசித்து சிரித்தார்! “இதோபார், நானும் கிறிஸ்தவ விசுவாசிதான்! நான் விசுவாசிக்கும் தேவன் எனக்கு நல்லதே செய்திருக்கிறார்! இப்போது நான் கட்டிய புது வீட்டைப் பார்! புதிய காரைப் பார்! என் ஒரு பிள்ளை டாக்டர் படிக்கிறான், மற்றொரு பிள்ளை இன்ஜினியர் படிக்கிறான். உனக்கு புத்தி வரட்டும் என நான் கூறுவதைக் கேள்: நான் சுகமாய் வாழும் ‘இதுதானய்யா கிறிஸ்தவம்’. பாடுகள், துயரம், சிலுவை சகித்தல்.... இதெல்லாம் கிறிஸ்தவம் என கூறிக்கொள்ள உனக்கு வெட்கமா யில்லை! உன் சுவிசேஷத்தை யார் கேட்பார்கள்?” என பெருமையுடன் கூறினார்! ஈட்டிபோல் துன்புறுத்திப் பேசிய தன் நண்பனுக்கு, அவர் வெகு நிதானமாய் பதில் கூறினார்: “என் தேவன் ஒரு அன்புள்ள* **டெய்லரைப்போல்!** *அவரவர்களுக்குரிய உபத்திரவத்தை தன் டேப் வைத்து அளந்தளிக்கிறார். மேலும், இன்னொரு இரகசியமும் இந்த டெய்லரைப் பற்றி கேளும்! அவர் என் தப்பிதங்களையும் பாவங்களையும் மனதில் வைத்து, எனக்கு உபத்திரவங்களை அளந்திட மாட்டார்! ஏதோ, தப்பிதம் செய்ததற்கு தண்டித்து, தேவன் இந்த உபத்திரவங்களை எனக்குத் தந்து விட்டார், என நீங்கள் எண்ணுவது தவறு! என் கர்த்தர் மிகவும் நல்லவர்!*

**நீங்கள் கூறும் ‘உலக மேன்மை’ சுவிசேஷம் அல்ல! அது, புகைபோல் ஒழிந்து போகும்! நானோ, நித்திய மகிமை சுதந்தரிக்கவே என்னை கர்த்தரிடம் ஒப்புவித்திருக்கிறேன். நித்திய மகிமை சுதந்தரிக்க உபத்திரவங்கள் அவசியம் என்பதை இயேசு எனக்கு கற்றுத் தந்துள்ளார்!”** *என கெம்பீரமாய் கூறினார்.*

*அவ்வளவுதான், கேள்வி கேட்டவர் வியப்புடன் வாயடைத்துப் போனார்!*

*- T.ரத்தினகுமார்*

## அர்ப்பண உண்மை தாசன்,
# F.B.மேயர்



ஒரு நல்ல மேய்ப்பன்! ஒரு நல்ல போதகன்! ஒரு நல்ல சுவிசேஷகன்! என போற்றப்படும் *F.B.*மேயர் 1847-1929 காலத்தை சேர்ந்தவர். லண்டன் மாநகரத்தில் பிறந்த *F.B.*மேயரின் தந்தை ஒரு சிறந்த வர்த்தகர். தன் சரியான வாலிப காலத்தில் இரட்சிக்கப்பட்டு, தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தார். தேவ அழைப்பு பெற்று, 1870-ம் ஆண்டு உதவி பாஸ்டராய், லிவர்பூல் பாப்திஸ்து சபையில் ஊழியம் செய்தார். 1872-ம் ஆண்டு, யார்க் (York) நகரிலுள்ள பாப்திஸ்து சபைக்கு, மேயர் அவர்கள் பாஸ்டராக அங்கீகாரம் பெற்றார். அந்த சபையில் ஊழியம் செய்யும் போதுதான் டி.எல். மூடி பிரசங்கியாரை சந்திப்பதற்கும், அவரோடு நட்பு கொண்டு சுவிசேஷம் ஊழியம் செய்வதற்கு கர்த்தர் அனுகிரகம் செய்தார். அதன் பிறகு "சுவிசேஷ ஊழியத்தை தன் பிரதானமாக கொண்டு" தன் ஊழியத்தை தொடர்ந்தார். வெளியில் உள்ள சுவிசேஷ ஊழியத்திற்கு ஆர்வம் கொண்டபடியால், அதற்கு மறுப்பு தெரிவித்த யார்க் சபை தலைவர்கள், கடுமையாய் அவருக்கு எதிர்த்து நின்றார்கள். நான்கு வருட ஊழியத்திற்கு பிறகு யார்க் சபை ஊழியத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார்.

பின்பு ஓர் நீண்ட 1926-ம் ஆண்டு வரை லாம்பெர்த் சபையில் போதகராய் ஊழியம் செய்தார். இப்போது ஏற்பட்ட மாற்றத்தில், ஞாயிற்றுகிழமை மாலை கூட்டங்களில் எளிய கடினமான உழைப்பாளிகளை, பல நூறு அந்த மக்களுக்கு சிறந்த ஊழியங்கள் வாரந்தோறும் செய்தார். குடிபழக்கம், விபச்சாரம் போன்ற தீமையில் அகப்பட்ட வாலிப மக்களிடம் வெகு பிரயாசத்தோடு ஊழியம் செய்து, அவர்கள் அனைவரையும் தெய்வ கிருபையால் விடுவித்தார். இதுபோன்ற ஜனங்களுக்காகவே பெரிய படைமுயற்சி கூட்டங்கள் நடத்தி, அதன் விளைவாய் 700-க்கும் மேலாக விபச்சார விடுதிகள் மூடப்பட்டன! அவர் தேவையுள்ள மக்களைத் தேடி, பல்லாயிரம் மைல்கள் மாறி மாறி பயணம் செய்து, அமெரிக்கா மற்றும் கனடா தேசங்களில் வலிமையான சபைகளை ஸ்தாபித்தார்.

அவர் பிரசங்கித்த மற்றும் அவர் எழுதிய புத்தகங்களில், நம் உள்ளத்தை தொடும் சில வாசகங்களை வாசித்துப் பாருங்கள்:

"சில என் ஜெபங்கள், கேட்கப்படவில்லை என்பதா துயரம்? இல்லை, நீங்கள் ஏறெடுக்காத ஜெபங்களே உண்மையான துயரம்"

"தியாக சிந்தையா? 'அன்பிற்காக' இழப்பதே தூய்மையான தியாகம்"

"நீங்கள் சோதனையை எதிர்த்து போராடும் ஒவ்வொரு சூழ்நிலையும், உங்களுக்கு வெற்றியே!"

"தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்! என்ற செய்தி உங்கள் எல்லா பயத்திற்கும் முற்று புள்ளி"

இவ்வாறு ஏராளமான "பரத்தின் உற்சாகத்தை" தன் பிரசங்கத்திலும், தன் புத்தகத்திலும் எழுதி பல்லாயிரம் மக்களை ஆசீர்வதித்துள்ளார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## ஓ வாலிபனே, மோட்ச வாசல் பிரவேசம், எளிதல்ல!

சுவிசேஷப் பிரசங்கியார் ஒருவரிடம், ஒரு கிறிஸ்தவ இளைஞன் ஒரு சமயம் வந்து “ஐயா, நீங்கள் என் ஆத்துமாவைக் குறித்துக் கவலை கொள்ளவேண்டிய அவசியமே இல்லை. மோட்சம் செல்லும் திரள் கூட்டத்தினுள் நானும் ஒருவனாக எப்படியாயினும் நழுவி உள்ளே வந்து விடுவேன்” என்று கூறினான். அதற்கு மாறுத்தரமாக அந்த ஞானமுள்ள தேவ மனிதன் “தம்பி, நீ ஒரு தவறான இடத்தைப்பற்றிக் கூறுகின்றாய் என்று நான் நினைக்கிறேன். நீ நினைக்கின்ற திரள், திரள் கூட்டமான ஜனம், மோட்சத்திற்கு அல்ல, நரக பாதாளத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. நீ வேண்டுமானால் சாவதானமாக நழுவி, நரகத்தின் அக்கினி கடலுக்குச் செல்லலாமே தவிர, மோட்சத்திற்குள் நழுவிச் செல்லும் காரியத்திற்கு ஒருக்காலும் இடமே இல்லை” என்று கூறினார். சற்றே நடுங்கிப்போய்விட்ட அந்த இளைஞன் ‘இப்போது’ தன் ஆத்துமாவிற்காக மெய்யாகவே கரிசனை கொள்ளத் துவங்கினான்.

மேற்கண்ட அந்த இளைஞனைப் போலவே, இன்று அநேகர் மோட்சம் செல்லுவது அத்தனை எளிது என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். “.... கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்” (மத்.7:13,14) என்றும் “அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்” (மத்.7:14) என்றும், கர்த்தருடைய வார்த்தை தெளிவாகக் கூறுகின்றது. நோவா காலத்துப் பூர்வ உலகத்தின் முழு ஜனத்திரளிலும், தேவனின் கிருபைப் பேழைக்குள் கடந்து சென்றோர் இரு கை விரல்களின் எண்ணிக்கையில் அடங்கும் குறைவான எட்டுப்பேர் மாத்திரமே!

நாம் கிறிஸ்து இரட்சகரில், ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட நன்னாளில் பெற்ற நம்முடைய இரட்சிப்பே, நம்மை நித்தியானந்த மோட்ச இன்ப நாட்டிற்கு அழைத்துச் செல்லக்கூடியது!

தான் பாவி என்று உணர்வடைவதும்! தன் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுவதும்! கிறிஸ்துவுக்குள் பழைய வாழ்க்கை ஒழிந்து..... புதிய வாழ்க்கை துவங்குவதுமே, நம்மை பரலோக ராஜ்ஜியத்திற்குள் இட்டுச்செல்லும் விலையேறப் பெற்ற இரட்சிப்பு!! என உணர்ந்து, மனந்திரும்புங்கள்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**